www.kalvikural.com

பள்ளிக்கல்வித்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–600 009.

கடித (நிலை) எண்.129, பள்ளி கல்வி [பக5(2)]2013–1, நாள் 17. 07.2013

அனுப்புநர்
திருமதி.த.சபிதா, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
ஆசிரியர் கல்வி மற்றும் ஆசிரியர் பயிற்சி இயக்குநர், சென்னை–6.
இயக்குநர், பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம், சென்னை–6.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
மாநிலக் கணக்காயர், சென்னை–18 (பெயர் உறையில்)
மாநிலக் கணக்காயர்,சென்னை–35.
மாநிலக் கணக்காயர் (CAS),சென்னை – 9.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5/79/35.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்துக் கருவூல அலுவலர்கள்.

ஐயா

பொருள் பள்ளிக் கல்வி– பட்டதாரி ஆசிரியர்கள் எம்.ஏ./ எம்.எஸ்சி., பட்டப்படிப்பிற்கு பெறும் முதல் ஊக்க ஊதிய உயர்வுக்குப்பின் இரண்டாவது ஊக்க ஊதிய உயர்வு பெற தகுதியாக உயர்கல்வி எம்.எட். உடன், எம்.பில் மற்றும் பி.ஹெச்.டி பட்டங்களை சேர்த்து ஆணை வெளியிடப்பட்டது குறித்து – தெளிவுரை வழங்குதல் – குறித்து.

பார்வை :1) அரசாணை (1டி) எண்.18, பள்ளிக் கல்வி (இ2) துறை, நாள் 18.01.2013.
2) பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித எண்.98543/கே /இ1/2010, நாள்.10.06.2013

*********

பார்வை இரண்டில் காணும் கடிதத்தில் பள்ளிக் கல்வி இயக்குநர், அரசாணை (1டி) எண்.18 பள்ளிக் கல்வி (இ2) துறை, நாள்: 18.01.2013–ன்படி, எம்.எட்., / எம்.பில்., மற்றும் பி.எச்.டி., பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு இரண்டாவது ஊக்க ஊதிய உயர்வு எந்த தேதி முதல் அளிக்கப்பட வேண்டும் என்பது குறித்து தெளிவுரை கோரியுள்ளார்.

www.kalvikural.com



2. பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொண்டதற்கிணங்க அரசாணை (1டி) எண்.18, பள்ளிக் கல்வி (இ2) துறை, நாள்: 18.01.2013–க்கு கீழ்க்கண்டவாறு தெளிவுரை வழங்கப்படுகிறது :–

> "அரசாணை (1டி) எண்.18, பள்ளிக் கல்வி (இ2) துறை, நாள்: 18.01.2013–ன்படி. பட்டதாரி ஆசிரியர்கள் எம்.எட்., அல்லது எம்.பில்., அல்லது பி.எச்டி., பட்டம் பெற்றிருந்தால் இரண்டாவது ஊக்க ஊதிய உயர்வு பெறுவதற்கான உயர்கல்வி தகுதியாக கருதி, அதாவது ஒரு ஆசிரியரின் மொத்தப் பணிக் காலத்தில் அதிகப் பட்சமாக இரு ஊக்க ஊதிய உயர்வுகளே அனுமதிக்கவேண்டும் என்ற அடிப்படையில் இரண்டாவது ஊக்க ஊதிய உயர்வு, இவ்வாணை வெளியிடப்பட்ட நாள் முதல், அதாவது 18.01.2013 முதல் வழங்கலாம். "

தங்கள் நம்பிக்கையுள்ள

அரசு முதன்மைச் செயலாளருக்காக.

நகல்

பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை,சென்னை–9.
ஆதி திராவிடர் (மற்றும்) பழங்குடியினர் நலத்துறை, சென்னை–9.
நிதி(கல்வி॥)த்துறை, சென்னை–9.
பணியாளர் (ம) நிர்வாகச்சீர்திருத்தத் துறை,சென்னை–9.
இயக்குநர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–5.
இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை–5.
ஆணையர், மாநகராட்சி, சென்னை/மதுரை/கோயமுத்தூர்.
மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சரின்
நேர்முக உதவியாளர்,சென்னை–9.